# பொழிச்சலூர் புனித ஆரோக்கிய அன்னைக்கு நவ நாள் செபம்



பொழிச்சலூர் புனித ஆரோக்கிய அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் -3.

ஒருவர் : அற்புதங்கள் பல புரியும் ஆரோக்கிய அன்னையே!

எல்லோரும் : உம்மை போற்றுகின்றோம்

ஒருவர் : அற்புத சுகமளிக்கும் ஆரோக்கிய அன்னையே!

எல்லோரும் : உம்மை வாழ்த்துகின்றோம்.

ஒருவர் : ஆறுதல் அனைத்திற்கும் ஊற்றாகிய ஆரோக்கிய அன்னையே!

எல்லோரும் : உம்மை புகழ்கின்றோம்.

ஒருவர் : அனைவரின் ஆனந்தமாகிய ஆரோக்கிய அன்னையே!

எல்லோரும் : உம்மை மகிமைப்படுத்துகின்றோம்.

ஒருவர் : அண்டிவந்தோருக்கு அடைக்கலம் தரும் ஆரோக்கிய அன்னையே!

எல்லோரும : உமக்கு நன்றி கூறுகின்றோம்.

ஒருவர் : புதுமைகள் பல புரிகின்ற ஆரோக்கிய அன்னையே உம்மக்களாகிய நாங்கள் உம் திருவடியில் சமர்ப்பிக்கின்ற வேண்டுதல்களை கனிவாய் கண்ணோக்கி அருள்புரிவாயே

எல்லோரும் : அருள்மழை பொழியும் ஆரோக்கிய தாயே / துன்பப்படுவோரின் துயர் துடைக்கும் தயைமிகு தாயே /இதோ அசைக்க முடியாத முழு நம்பிக்கையுடன் /உமது திருத்தலத்தில் கூடியுள்ளோம். உமது வல்லமையுள்ள மன்றாட்டினால் / எங்களைக் காத்தருளும் / நாங்கள் எவ்விதத் தவறிலும் கேட்டிலும் விழாதபடி /எங்கள் கரம்பிடித்து வழி நடத்தும் தாயே / எல்லாவற்றிற்கும் மேலாக இறை இயேசுவையே அன்பு செய்யவும் / அவருக்காகவே வாழவும் எங்களுக்கு துணை செய்வீராக.

ஏழைகளையும், ஆதரவற்றவர்களையும் / அன்புடன் அரவணைக்கும் அன்னையே / எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவோடு ஒன்றித்திருக்கின்ற நீர் / சக்திமிக்கவளாய் இருக்கின்றீர் அம்மா / நாங்கள் கேட்பதை தட்டாமல் தருகின்ற அன்புத்தாயே / துன்பத் துயரங்களிலிருந்து எங்களைக் காப்பாற்றும் / தீராத வியாதி வருத்தங்களிலிருந்து விடுவித்தருளும் / வறுமையில் வாடும் எங்கள் வாழ்வை வளமாக்கும் / அமைதியின்றி அலையும் எங்களுக்கு ஆறுதல் தாரும் / வாழ்வதற்கு அறியாது வருந்தும் எங்களுக்கு வாழ வழிகாட்டும் / எங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஞானத்தையும் / இளைஞர்களுக்கு நல்லதொரு வேலை வாய்ப்பையும் / மணமாகாதவர்களுக்கு மனவாழ்வையும் / எங்கள் குடும்பங்களையும், தொழிலையும் ஆசீர்வதித்து பாதுகாத்தருளும் தாயே.

ஒருவர் : நம்முடைய தனிப்பட்ட கருத்துக்களுக்காக செபிப்போம் (மௌனம்)

எல்லோரும் : பரலோக - 1, அருள்நிறை - 3, திரிகால - 1.

- ஆமென்.